## ‘தி.மு.க.வை அழிப்பேன்’ என்று கிளம்பியுள்ளவர்களுக்கு

# மக்கள் சரியான பதிலடி கொடுப்பார்கள்!

### கல்லணை செல்லக்கண்ணு இல்லத் திருமண விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!

தஞ்சை,நவ.8-

**தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் கல்லணை செல்லக்கண்ணு அவர்களின் மகள் மருத்துவர் காவியா - திலீபன் இணையரின் திருமணத்தை, தஞ்சையில் நேற்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் நடத்தி வைத்தார். அப்போது அவர், மணமக்கள் இருவரும் தமிழ்நாடும் - சமூகநீதியும் போல பல்லாண்டு வாழ்கவென வாழ்த்திப் பேசினார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய சிறப்புரை வருமாறு:**

தஞ்சை மத்திய மாவட்டம், பூதலூர் வடக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் அண்ணன் `கல்லணை’ செல்லக்கண்ணு அவர்களின் அன்பு மகள் மருத்துவர் காவியா, திலீபன் அவர்களின் திருமண விழாவில் பங்கேற்று, மணமக்களை உங்களோடு சேர்ந்து வாழ்த்துவதில் மிகுந்த பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.





நம் தஞ்சை மாவட்டத்திற்கு எத்தனையோ முறை வந்திருக்கிறேன். கழகத்தின் உறுப்பினராக, இளைஞர் அணிச் செயலாளராக, சட்டமன்ற உறுப்பினராக, விளையாட்டுத்துறை அமைச்சராக என்று பலமுறை வந்து இருக்கிறேன். ஆனால், இன்று நம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான, திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர் என்ற பொறுப்பை ஏற்ற பிறகு, முதன்முறையாக இந்தத் தஞ்சாவூருக்கு வருகை தருவதில் மிகுந்த பெருமை அடைகிறேன்.

#### தஞ்சைதான் முதல் குரல்

இங்குப் பேசிய அண்ணன் சந்திரசேகர் குறிப்பிட்டதைப் போல் தேதி வாங்கும்போது அவர் விளையாட்டுத்துறை அமைச்சர்தான். ஆனால், திருமணம் நடக்கும்போது அவர் துணை முதலமைச்சர். அதற்கு அந்த மணப்பெண்ணின் இராசி என்று சொன்னார். அதேபோல் எனக்கு முன்பு பேசிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அண்ணன் பழனிமாணிக்கம் அவர்கள்தான், இந்தத் தஞ்சையில் இருந்துதான் முதல் குரல் வந்தது.

சென்னையில் நடந்த கழகத்தின் முப்பெரும் விழாவில் தலைவருக்கு ஒரு கோரிக்கை வைத்தார். எனவே, அதற்குக் காரணமாக இருந்ததும் இந்தத் தஞ்சை மாவட்டம்தான். இன்றைக்குத் துணை முதலமைச்சராக வந்து இருக்கிறேன் என்றாலும், நம் தலைவர் முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்து இருக்கிறார் என்றாலும், அதற்கும் காரணம் இந்த தஞ்சை மாவட்டம்தான் என்று கூறிக்கொள்கிறேன்.

நேற்று விழுப்புரத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், கழக நிகழ்ச்சிகள் எல்லாம் முடித்துவிட்டு, நேற்று இரவு தஞ்சை மாவட்டம் வந்தடைந்தேன். பொதுவாக, நவம்பர் மாதம் என்றாலே கண்டிப்பாக மழைபெய்யும் என்று சொன்னார்கள். கண்டிப்பாக மழையும் பெய்தது. உங்களின் அன்புமழையில் நனைந்துகொண்டுதான் தஞ்சை மாவட்டத்திற்குள்ளேயே நுழைந்தேன். அதற்காக மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் அவர்களுக்கு என் நன்றியையும், வரவேற்ற அத்தனை கழக உடன்பிறப்புகளுக்கும் நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

#### நடத்திக் காட்டுவார்

அண்ணன் துரை.சந்திரசேகரன் அவர்களைப் பொறுத்தவரை அடிக்கடி அல்லது சாதாரணமாக ஒரு தேதி வாங்கமாட்டார். எப்போதாவதுதான் தேதியை அவர் கேட்பார். அப்படி அவர் தேதியை கேட்கும்போது அதனைத் தட்ட முடியாத அளவிற்கு அந்தத் தேதி இருக்கும். அந்த நிகழ்ச்சி இருக்கும். அதேபோல் அவர் தேதி வாங்கிவிட்டால், அந்த நாள் முழுக்கப் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டிவிடுவார். அதேபோலத்தான் இன்றைக்குப் பல்வேறு நிகழ்ச்சிகளில் இந்தத் திருமண நிகழ்ச்சியும் மிகச்சிறப்பாக உங்கள் முன்னிலையில் நடந்துக்கொண்டு இருக்கிறது.

நம் தஞ்சைத் தொகுதி, நம் கலைஞர் அவர்கள் நின்று வென்ற தொகுதி. தஞ்சை மண்ணில் கலைஞர் கால் படாத இடம் கிடையாது என்று சொல்லும் அளவிற்கு, தஞ்சை மாவட்டத்திற்கும், கலைஞருக்கும் அவ்வளவு நெருக்கம். அதேபோலத்தான் நம் தலைவர் அவாகளும் தஞ்சை என்றாலே எப்போதுமே உற்சாகம் ஆகிவிடுவார்.

உங்களுக்கே தெரியும் தலைவர் அவர்கள் பலமுறை பெருமையோடு கூறிக்கொள்வார். நானும் டெல்டாக்காரன் என்று உரிமையோடும், பெருமையோடும் கூறுவார்.

அந்த வகையில் அண்ணன் `கல்லணை’ செல்லக்கண்ணு அவர்களின் இல்ல திருமண விழாவில், துணை முதலமைச்சர் மட்டுமல்ல, நானும் ஒரு டெல்டாகாரன்தான் என்று திருமண விழாவில் பங்கேற்பதில் பெருமை அடைகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

#### கல்லணை காத்தான்

அண்ணன் செல்லக்கண்ணு அவர்களின் மகள் மருத்துவர் தங்கை காவியாவுக்கும், திலீபனுக்கும் இங்கு சுயமரியாதை முறையில் சிறப்பான திருமணம் நடைபெறுகிறது. அண்ணன் செல்லக்கண்ணு அவர்களின் குடும்பம் பாரம்பரியமிக்கக் கழகக் குடும்பமாகத் திகழ்ந்து வருகிறது. அண்ணன் செல்லக்கண்ணு அவர்களின் தந்தையார் கல்லணை காத்தான் அவர்கள் கிட்டத்தட்ட 35 ஆண்டுகள் ஒன்றியச் செயலாளராக இருந்து கழகத்தைக் காப்பாற்றியவர். கழகத்தைக் கட்டிக் காத்தவர்.

பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், தாத்தா அன்பில் தர்மலிங்கம் அவர்களோடு எல்லாம் நெருங்கிப் பழகியவர். கழகத்தை வளர்த்தவர். கழகத்திற்கு நெருக்கடி ஏற்பட்ட காலத்திலும், இப்பகுதியில் கழகத்தைக் கட்டிக் காத்த செல்லக்கண்ணு அவர்களின் தந்தையாரை `கல்லணை காத்தான், கழகத்தைக் காத்தான்’ என்று கலைஞர் அவர்களே புகழ்ந்துள்ளார்கள்.

அண்ணன் செல்லக்கண்ணு அவர்களின் இரண்டு மூத்த சகோதரிகளின் திருமணத்தை, கலைஞர் அவர்கள் தலையேற்று நடத்தி வைத்தார்கள். அவர்களின் இரண்டு இளைய சகோதரிகளின் திருமணத்தை நம் கழகத் தலைவர் அவர்கள் நடத்தி வைத்தார். அண்ணன் செல்லக்கண்ணு அவர்களும் கிட்டத்தட்ட 14 ஆண்டு காலமாக ஒன்றிய பொறுப்பாளர், ஒன்றியச் செயலாளர் என்று மிகச்சிறப்பாகத் தன் கழகப் பணியை ஆற்றி வருகிறார். கழகத்திற்காகப் பல்வேறு போராட்டங்களில் கலந்துகொண்டு சிறை சென்றவர்தான் அண்ணன் செல்லக்கண்ணு அவர்கள். ஒன்றியப் பெருந்தலைவராகவும் இந்தப் பகுதியில் சிறப்பாக மக்கள் பணியாற்றி வருகிறார். `

#### சுகவாழ்வு– சுயமரியாதை

சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு’ என்று முழங்கிய தந்தை பெரியாரின் வார்த்தைகளை மனதில் ஏந்தி, இந்த இல்விழாவில் இணைகின்ற மணமக்களுக்கு நாம் அனைவரும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்வோம்.

இங்கு ஆண்களைவிட, மகளிர் நிறையபேர் வந்து இருக்கிறீர்கள். ஒரு காலத்தில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியே வருவதற்கு உரிமை கிடையாது. படிப்பதற்கு உரிமை கிடையாது. இவை எல்லாவற்றையும் மாற்றியது யார் என்று பார்த்தால், அதுதான் நம் திராவிட இயக்கம்.

பெண்களின் அடிமை விலங்கை உடைத்தவர்தான் நம் பெரியார் அவர்கள். அரசு திட்டங்கள் மூலம், தந்தை பெரியார் விரும்பியதை பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும் பெண்கள் தங்கள் வாழ்வில், மேன்மேலும் உயர்ந்து பறக்க சிறகுகளைத் தந்தார்கள்.

இன்றைக்கு நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் `மகளிரின் வளர்ச்சியே, மாநிலத்தில் வளர்ச்சி’ என்று எண்ணற்றத் திட்டங்களைத் தந்துக்கொண்டு இருக்கிறார். அதற்கு ஒரு சில எடுத்துக்காட்டுகளை மட்டும் இங்கு எடுத்துக்கூற விரும்புகிறேன்.

#### அடுக்கடுக்கான திட்டங்கள்

மகளிருக்குக் கட்டணமில்லா விடியல் பயணம் திட்டம், கல்லூரி படிக்கும் மாணவிகளுக்குப் புதுமைப்பெண் திட்டம், கல்லூரி படிக்கும் மாணவர்களுக்குத் தமிழ்ப்புதல்வன் திட்டம், பள்ளிப் படிக்கும் குழந்தைகளுக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்று அடுக்கடுக்கான திட்டங்களை நம் முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

எல்லாவற்றிற்கும் மேலாக, முத்தாய்ப்பாக கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம் என்ற மகத்தான திட்டத்தைத் தந்து இன்றைக்கு ஒவ்வொரு மாதமும், மாதம் ஆயிரம் ரூபாய் 1 கோடியே 16 லட்சம் மகளிருக்கு மகளிர் உரிமைத்தொகையாக வழங்கப்பட்டு வருகிறது.

இப்படி மகளிரின் சுயமரியாதையை நிலைநாட்ட, பொருளாதாரச் சுதந்திரத்தை உறுதிப்படுத்த நம் திராவிட மாடல் அரசு பார்த்து, பார்த்து எல்லா திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இந்திய ஒன்றியத்திலேயே சிறப்பாகச் செயல்படுகின்ற அரசு என்றால், அது நம் திராவிட மாடல் அரசு, நம் திராவிட மாடல் முதலமைச்சர் அவர்கள்தான்.

#### எதிரிகளுக்கு எரிச்சல்

தமிழ்நாடு அனைத்து துறைகளிலும் எப்படிச் சிறந்து விளங்குகிறது என்று நிதி ஆயோக் மற்றும் ஒன்றிய புள்ளியியல் துறைகள் அறிக்கைகளே வெளியிட்டுள்ளன. இன்றைக்குப் பல பேர் கிளம்பி இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தை அழிப்பேன் என்று சில பேர் கிளம்பி இருக்கிறார்கள். அதற்கெல்லாம் நாம் பதில் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை. தமிழ்நாட்டு மக்கள் அதற்குச் சரியான பதிலடியைக் கொடுப்பார்கள். எனவே, நம் தி.மு.க தொண்டர்கள் எல்லாம் உணர்ச்சிவசமாக, சந்தோசமாக, உற்சாகமாக இருக்கிறார்கள்.

இந்த உற்சாகம்தான் நம் எதிரிகளுக்கு மிகுந்த எரிச்சலைத் தருகிறது. நம் தலைவர் தலைமையில் நாம் பெறுகின்ற தொடர் வெற்றிதான் அவர்களுக்கு எரிச்சலை தருகிறது. அ.தி.மு.க-வை எடுத்துக்கொண்டால், இன்றைக்குப் பல்வேறு அணிகளாகப் பிரிந்து நிற்கிறது. இப்படி அணி, அணியாக, தனித்தனியாக அ.தி.மு.க-வும், யாருமே சீண்டாத பா.ஜ.க-வும் எப்படியாவது தி.மு.க கூட்டணியில் விரிசல் விழுந்துவிடாதா என்று துண்டு போட்டுக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஆனால், நம் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான நம் கூட்டணி வலுவாக உள்ளது என்று நம் தலைவரும் சொல்லிவிட்டார்.

நம் கூட்டணிக் கட்சித் தலைவர்களும் அதில் மிகச் தெளிவாக இருக்கிறார்கள்.

ஆகவே, நாம் நம் பணிகளில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இன்றும் ஒன்றரை வருடங்களில் சட்டமன்றத் தேர்தல் வரப்போகிறது. கழகத்தின் முப்பெரும் விழாவில் பேசிய நம் தலைவர் அவர்கள் நம் கழகத் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி குறைந்தது 200-க்கும் அதிகமான தொகுதிகளில் வெல்ல வேண்டும் என்று இலக்கை நமக்கு அளித்து இருக்கிறார். இந்த இலக்கை நோக்கி, நாம் அனைவரும் ஒன்றாக உழைக்க வேண்டும். ஒவ்வொரு வீட்டிற்கும் ஏறி நம் கழக அரசின் சாதனைகளை, முதலமைச்சரின் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும். இங்கு வந்து இருக்கின்ற ஒவ்வொருவரும் கழக அரசின் பிராண்ட் அம்பாசிடர்களாக இருந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

2026-ல் கழகம் மீண்டும் வென்றது. கழகத் தலைவர் இரண்டாவது முறையாக முதலமைச்சர் ஆனார். திராவிட முன்னேற்றக் கழகம் ஏழாவது முறையாக ஆட்சி அமைத்தது என்ற வரலாற்றை உருவாக்குவோம். அதற்கான உறுதியை இன்றைக்கு இந்தத் தஞ்சை மண்ணில் எடுத்துக்கொள்வோம்.

மணமக்கள் காவியா, திலீபன் இருவருமே நிரம்பப் படித்தவர்கள். இல்வாழ்வில் நீங்கள் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு சுயமரியாதையோடு வாழ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒரேயொரு கோரிக்கை உங்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்கு ஒரு அழகான தமிழ் பெயரை வையுங்கள் என்று கூறிக் கொள்கிறேன்.

#### தீர்மானம் நிறைவேற்றுக

அண்ணன் துரை சந்திரசேகரன் அவர்கள் பேசும்போது இந்தத் தஞ்சை மாவட்டத்தின் இராசியைப் பற்றி அவர் சொன்னார். அவர் எந்தத் தீர்மானம் நிறைவேற்றினாலும், அது உடனே நடைபெற்றுவிடும் என்று சொன்னார். அவர்தான் தஞ்சை மாவட்டத்தில் இளைஞர் அணிச் செயலாளராகப் பொறுப்பேற்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியதாகச் சொன்னார். அது உடனே நடந்தது என்று கூறினார். அதேபோல அமைச்சராக வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியதுதான் சொன்னார். அதுவும் உடனே நடந்தது என்று சொன்னார். அவர்தான் இந்தத் தஞ்சை மாவட்டத்தில் இவருக்குத் துணை முதலமைச்சர் பொறுப்பு கொடுக்க வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றியதாகச் சொன்னார். அதுவும் நடந்துவிட்டதாகச் சொன்னார்.

அவரிடத்தில் ஒரேயொரு கோரிக்கை. அடுத்தத் தீர்மானம் 2026-ஆம் ஆண்டு தமிழ்நாடு முழுவதும் நம் ஆட்சி அமைய வேண்டும். தஞ்சை டெல்டா மாவட்டம் முழுவதும் அனைத்துத் தொகுதிகளிலும் தி.மு.க. வெற்றிபெற வேண்டும் என்று நீங்கள் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும். தீர்மானம் நிறைவேற்றினால் மட்டும் பத்தாது. அதைத் தீர்மானமாக மனதில் ஏற்றிக்கொண்டு அதற்காக உழைக்க வேண்டும் என்று கூறிக்கொண்டு, புதுமணத் தம்பதிகள் நீங்கள் இருவரும் பெரியாரும் பகுத்தறிவும் போல, அண்ணாவும் தமிழ்நாடும் போல, கலைஞரும் கழகமும் போல, நம் கழகத் தலைவரும் திராவிட மாடல் அரசும் போல பல்லாண்டு வாழ்க, வாழ்க என வாழ்த்தி இந்த வாய்ப்புக்கு நன்றிகூறி விடை பெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர்கள் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன், எஸ்.எஸ்.சிவசங்கர், டி.ஆர்.பி.ராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகர், அண்ணாதுரை, டி.கே.ஜி.நீலமேகம், சாக்கோட்டை அன்பழகன், அசோக்குமார், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சு.கல்யாண சுந்தரம், முரசொலி, கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம்,

மாவட்டக் கழகச் செயலாளர் பூண்டி கலைவாணன், மாநகரச் செயலாளர், மேயர் சண்.இராமநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம், மாவட்ட அவைத்தலைவர் இறைவன்,

சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் இராமச்சந்திரன், அன்பில் பெரியசாமி, கே.டி.கிருஷ்ணசாமி, தாட்கோ தலைவர் மதிவாணன், து.செல்வம், மணிமாறன், புண்ணியமூர்த்தி, கனகவள்ளி, எல்.ஜி.அனிதா, ஏ.வி.வி.பாலசுப்ரமணியம், கும்பகோணம் மாநகரச் செயலாளர் சுப.தமிழினியன், சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர், ஏ.கே.எஸ்.விஜயன், தலையாமங்கலம் பாலு, பழஞ்சூர் செல்வம், ஜெயப்பிரகாஷ், அஞ்சுகம் பூபதி, மன்னை சோழராஜன், நாகரத்தினம், இளைஞர் அணி மாநிலத் துணைச் செயலாளர் இளையராஜா, மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, சட்டமன்றத் தொகுதிப் பார்வையாளர்கள் பரணி கார்த்திகேயன், கேசவன், சுப.சரவணன், குறிஞ்சிவனம், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் முகில் வேந்தன், ஜி.கே.எம்.ராஜா, ஆதி ராஜேஷ், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் வாசிம்ராஜா உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



சென்னை வடகிழக்கு மாவட்டம், செங்குன்றம் பகுதியில் கழகம் வளர்த்த மிசா ஏழுமலை அவர்களின் பேத்தியும் – இரா.ஏ.பாபுவின் மகளுமான அஞ்சலி – பிரபாகரன் இணையரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். உடன் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., கே.பி.சங்கர் எம்.எல்.ஏ. ஆகியோர் உள்ளனர்.



ம.தி.மு.க. பொதுச் செயலாளர் – மாநிலங்களவை உறுப்பினர் வைகோ அவர்களின் பேத்தியும், மக்களவை உறுப்பினர் துரை வைகோவின் மகளுமான வானதி ரேணு – கோகுலகிருஷ்ணன் ஆகியோரின் திருமணம் நேற்று நடைபெற்ற நிலையில், சென்னை அண்ணா நகரில் உள்ள வைகோ அவர்களின் இல்லத்துக்கு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் சென்று மணமக்களை வாழ்த்தினார். அப்போது அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு உள்ளிட்டோர் உடனிருந்தனர்.